**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 94/2019 |
| Name | : | Mahendran |
| P.W. | : | 9 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.12.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**சாட்சி Micro soft teams செயலி மூலம் ஆஜரான பின்பு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் மேச்சேரி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.05.2019 ம் தேதி நான் மடத்துக்குளம் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த போது கணியூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்கள் கணியூர் காவல் நிலைய குற்ற எண்.87/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்குக் கோப்பை பெற்று நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 22.05.2019 ம் தேதி காலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகுடீஸ்வரன் மற்றும் சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.05.2019 ம் தேதி காலை 08.00 மணி முதல் 10.30 மணி வரை உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் வைத்து இவ்வழக்கில் இறந்து போன கருப்பையா என்பவரின்

பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கில் இறந்து போன கருப்பயைா என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் முகம்மது பைசர் அவர்களை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். 10.06.2019 ம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 58 AF 2023 Bajaj Discover இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் முத்துக்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். மேலும் 10.06.2019 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை விசாரணை செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் 196, 190(2) MV Act ன் படி கடந்த 10.06.2019 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.30 17:08:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்